**பிப்ரவரி – 17**

# TNPSC துளிகள்

- மூத்த நிர்வாக அதிகாரி பிரமோத் சந்திர மோடி என்பவர் வருமானவரித் துறைக்கான உயர்மட்ட கொள்கை வடிவமைப்பு அமைப்பான மத்திய நேரடி வரிகள் வாரிய மன்றத்தின் (Central Board of Direct Taxes – CBDT) தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவரும் ஆசியாவின் மிகப்பெரிய பணக்கார நபருமான முகேஷ் அம்பானி 437 கோடி ரூபாய் நன்கொடையுடன் ஹூரூன் இந்தியா மனிதநேயப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- 2016 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் செயல்பாட்டிற்கு வந்த ரஷ்யாவின் பாரா தடகள வீரர்கள் மீதான தடைகளை சில நிபந்தனைகளின் அடிப்படையில் சர்வதேச பாராலிம்பிக்ஸ் குழு தளர்த்தியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் – தமிழ்நாடு

- இந்தியாவிலேயே தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாக இந்தியா டுடே பத்திரிகை தேர்வு செய்து 4 விருதுகளை வழங்கியது. அந்தப் பிரிவுகளாவன
    - ஒட்டுமொத்தச் செயல்பாடு,
    - சட்டம் ஒழுங்கு
    - மேம்படுத்தப்பட்ட சட்ட ஒழுங்கு
    - சுற்றுலா

  ஆகியவையாகும்
- கடந்த ஐந்து வருடங்களில் 4 முறை உணவு தானிய உற்பத்தி உயர்வுக்காக, இந்திய அரசின் உயர் விருதான கிருஷி கர்மான் விருது பெறப்பட்டது.
- பெங்களூருவைச் சேர்ந்த பொது விவகாரங்கள் மையம் என்ற அமைப்பு சமூகப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டிற்கான தனது அறிக்கையில் ஆளுமையில் இரண்டாவது மாநிலமாகத் தமிழ்நாட்டைத் தேர்வு செய்தது.
- சிறந்த மனித ஆற்றல், பலமான உட்கட்டமைப்பு வசதிகள், மிகைமின் உற்பத்தி மற்றும் இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதால், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்குகிறது.
- தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு முதலிடம்.
- தேசியப் பயன்பாட்டுப் பொருளாதார ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வில், 2018 ஆம் ஆண்டில் தொழில் முதலீட்டிற்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை இரண்டாவது இடத்தில் தரவரிசைப்படுத்தியுள்ளது.
- பெரியகுளம் காவல் நிலையம் இந்தியாவிலேயே 8வது சிறந்த காவல் நிலையமாகத் தேர்வு.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தினை திறமையாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசின் 5 விருதுகள்.
- பொது விநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினி மயமாக்கியதற்காக விருது.
- மரபுசாரா எரிசக்தித் துறைக்கான கட்டமைப்புகளைச் சிறப்பாக உருவாக்கியதற்காக மத்திய அரசின் விருது.
- இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்வதில் முதன்மை மாநிலத்திற்கான மத்திய அரசின் விருதை தமிழ்நாடு தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பெற்று சாதனை.
- தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பாக செயல்பட்டமைக்காக மத்திய அரசிடமிருந்து 11 விருதுகள்.
- கோவை, ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளுக்கு சிறந்த நிர்வாகத்திற்கான தேசிய மற்றும் பன்னாட்டு விருதுகள்.
- திடக்கழிவு மேலாண்மைக்காக 2017 ஆம் ஆண்டிற்கான ஸ்காச் ப்ளாட்டினம் விருது.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒருங்கிணைந்த மேலாண்மைத் தகவல் முறைக்கான மத்திய அரசின் விருது.
- “பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்தியமைக்காக இந்தியாவின் முதன்மை மாநிலத்திற்கான விருது.

# தேசியச் செய்திகள்

## வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்

- இரயில் வண்டி 18 என்று அறியப்படும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் இந்தியாவின் முதல் நடுத்தர உயர்வேக இரயில் வண்டியாகும்.
- இதன் துவக்க விழா 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 15-ம் தேதியன்று புதுதில்லியில் பிரதமரால் கொடியசைத்துத் துவக்கி வைக்கப்பட்டது.



- வண்டி முழுவதும் குளிர்வசதி செய்யப்பட்ட இந்த சொகுசு வண்டி புதுதில்லியையும் வாரணாசியையும் இணைக்கிறது. மொத்தப் பயணத்தையும் 8 மணி நேரங்களில் மொத்த 750 கிலோ தூரத்தை மணிக்கு 130 கிலோமீட்டர் என்ற வேகத்தில் இது பூர்த்தி

செய்யும்.

- இது கான்பூர் மற்றும் அலகாபாத் (பிரயாக்ராஜ்) ஆகிய இடங்களில் நிறுத்தங்களைக் கொண்டிருக்கும்.


### டசால்ட் விமான நிறுவனத்துடனான ஒப்பந்தம்

- பிரான்சின் விமான உற்பத்தியாளரான டசால்ட் விமான நிறுவனத்துடன் ஒரு மூன்று வருட ஒப்பந்தத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகம் (Directorate of Employment and Training) கையெழுத்திட்டு இருக்கின்றது.
- விமானக் கட்டமைப்பு மற்றும் உதிரி பாகங்களைப் பொருத்தும் துறையில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அது தமிழ்நாட்டில் இரண்டு தொழில் பயிற்சி நிறுவனங்களையும் சேர்த்து மொத்தம் 3 பயிற்சி நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து இருக்கின்றது.
- தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நிலையங்கள் :
  - மத்திய அரசால் சென்னையில் நடத்தப்படும் தேசிய திறன் பயிற்சி நிலையம்
  - மாநில அரசால் கோயம்புத்தூரில் நடத்தப்படும் ஐடிஐ.
- இத்திட்டத்திற்காக மூன்றாவதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் மகாராஷ்டிராவின் நாக்பூரில் இருக்கின்றது.

## சர்வதேசச் செய்திகள்

### அமெரிக்காவில் தேசிய நெருக்கடி நிலை

- அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 15-ம் தேதியன்று அமெரிக்க மற்றும் மெக்சிகோ எல்லை முழுவதும் ஒரு சுவரைக் கட்டுவதற்கான தனது உறுதிமொழியை நிறைவேற்றிட வேண்டி தேசிய நெருக்கடி நிலையை அறிவித்திருக்கின்றார்.
- தற்சமயம் அவர் மெக்சிகோ எல்லையில் சுவர் கட்டுவதற்காக காங்கிரஸ் அச்சுவருக்கு தர மறுத்த கோடிக்கணக்கான டாலர்களை அணுகிட முடியும்.
- தேசிய நெருக்கடி நிலையை அறிவிப்பது என்பது, சில சட்டங்களை தற்காலிகமாக ரத்து செய்தல், ஒரு மனதாக தனிநபராக இராணுவத் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் இராணுவ நிதிகளை மாற்றியமைத்தல் போன்ற செயல்களுக்கு சிறப்பு அதிகாரங்களை அமெரிக்க அதிபருக்கு அளிக்கின்றது.
- முன்பு, பாராளுமன்றவாதிகள் எல்லையில் தடுப்புச் சுவர் கட்டுவதற்காக வாக்களித்த மசோதாவில் உள்ள 1.4 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற தொகையானது டிரம்ப் வலியுறுத்திய 5.7 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற தொகையைவிட மிகக் குறைந்த அளவாகும்.
- செலவழிப்பதற்கு காங்கிரஸ் அங்கீகாரம் அளிக்காத தொகையை மீறும் வகையில் காங்கிரசைச் சுற்றி வளைக்கும் வகையிலான ஒரு தீர்மானமும் இதற்கு முன் வழங்காத வகையில் டிரம்பின் தீர்மானம் முன்னெப்போதும் இல்லாததாகும்.
- ஒட்டுமொத்த இத்தீர்மானம் டிரம்பின் மூன்றாவதாகவும் உள்நாட்டுப் பிரிவில் முதலாவதாகவும் உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## ஆப்பர்சூனிட்டி ரோவர் திட்டத்தின் காலாவதி

- செவ்வாய் கிரகத்தைச் சென்றடைந்தது 15 வருடங்கள் ஆனதற்குப் பிறகு ஆப்பர்சூனிட்டி ரோவர் திட்டத்தின் இறுதி நிலையை நாசா அறிவித்தது.
- திட்டத்தை இறுதி செய்யும் இந்த முடிவானது ஆப்பர்சூனிட்டி செவ்வாய் ரோவர் விண்கலத்துடன் தனது இணைப்பைப் புதுப்பிக்க நாசா மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தேவையான முடிவுகளை அளிக்காததால் அறிவிக்கப்பட்டது.



- ஆப்பர்சூனிட்டி புவியுடன் கடைசியாக கடந்த ஜீன் மாதத்தின் ஆரம்பத்தில் செவ்வாயில் தனது மையத்தை அடைந்தபின் ஒரு வரலாற்றுச் சிறப்புடைய சர்வ புழுதிப்புயல் என்ற அர்த்தத்துடன் தொடர்பு கொண்டது.

### *திட்டத்தைப் பற்றி*

- 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் செவ்வாயில் தரையிறங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட இரட்டை செவ்வாய் ஆய்வு ரோவர்ஸ் திட்டத்தின் இரண்டாவது விண்கலம் ஆப்பர்சூனிட்டி ஆகும்.

- தனது இரட்டையில் ஒன்றான ரோவர் ஸ்பிரிட் செவ்வாயில் தரையிறங்கிய 90 நாட்களுக்குப் பிறகு ஆப்பர்சூனிட்டி அங்கு தரையிறங்கியது.
- ஸ்பிரிட் குசேவ் பள்ளத்தில் தரையிறங்கியது. ஆப்பர்சூனிட்டி செவ்வாயின் மறுபுறம் உள்ள மெரிடியனி சமவெளியில் தரையிறங்கியது.
- நாசா ரோவர் திட்டத்திற்கு வாழ்நாளாக 90 தினங்களை எதிர்பார்த்தது. ஆப்பர்சூனிட்டி மற்றும் ஸ்பிரிட் இரண்டும் அதற்கு எதிர்பார்க்கப்பட்ட வாழ்நாளை விட அதிக நாள் நீடித்தன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலக நீடித்த வளர்ச்சி மாநாடு 2019

- புதுதில்லியில் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவரால் உலக நீடித்த வளர்ச்சி மாநாடு துவக்கி வைக்கப்பட்டது.
- இது ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனம் எனப்படும் தெரி (The Energy and Resources Institute – TERI) நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.




- இது அந்நிறுவனத்தின் முக்கியமான ஒரு வருடாந்திர நிகழ்வு ஆகும். மேலும் இது வளரும் நாடுகளில் உள்ள உலகளாவிய விவகாரங்கள் மீது நடத்தப்படும் உலகின் ஒரே மாநாடு ஆகும்.
- 2019 மாநாட்டிற்கான கருத்துரு, "2030 ஆம் ஆண்டிற்கான இலக்கை அடைதல்: நமது வாக்குறுதியை நிறைவேற்றுதல்" என்பதாகும்.

## சிறு மானியங்கள் திட்டம்

- சமீபத்தில் புதுதில்லியில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், உலகச் சுற்றுச்சூழல் வசதி, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் சிறு மானியங்கள் திட்டம் (Small Grants Programme - SGP) ஆகியவற்றின் மீது ஒரு கருத்தரங்கம் நடத்தப்பட்டது.
- இத்திட்டம் 1992 ஆம் ஆண்டில் 33 நாடுகளில் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது.
- சிறு மானியங்கள் திட்டம் உலகச் சுற்றுச்சூழல் வசதியின் கூட்டுப் பங்காண்மை சார்பில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தால் நிறைவேற்றப்படுகின்றது.
- பெண்கள் மற்றும் பூர்வ குடிமக்கள் உள்ளிட்ட ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய

சமூகங்கள், உள்ளூர் பொதுச் சமூக நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு அதிகாரமளித்திடும் வகையில் கடைமட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக இத்திட்டம் தனித்துவமாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றது.

- இத்திட்டம் ஒரு அதிகாரப் பரவலாக்கப்பட்ட தேசிய அளவிலான விநியோக அமைப்புமுறை மூலம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- சிறுமானியங்கள் திட்டம் உலகளாவிய சுற்றுச்சூழல் விவகாரங்களுக்குத் தீர்வுகள் அளித்திட சமூகத்தால் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகளுக்கு நிதி அளிக்கின்றது.

# மாநிலச் செய்திகள்

## ராஜஸ்தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சட்டத்திருத்த மசோதா - 2019

- ராஜஸ்தான் மாநில அரசு சட்டப்பேரவையில் ராஜஸ்தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சட்டத்திருத்த மசோதா – 2019 என்ற மசோதாவை அறிமுகம் செய்தது.
- இது அரசு வேலை வாய்ப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் 5 சதவிகித இடஒதுக்கீட்டை அதற்காகப் போராடும் குஜ்ஜார் சமூகத்தினருக்கும் இன்னபிற நான்கு சமூகத்தினருக்கும் அளிப்பதற்கு எண்ணுகின்றது.
- இம்மசோதா பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டை தற்போது உள்ள 21 சதவிகிதத்திலிருந்து குஜ்ஜார்கள், பஞ்சாராக்கள், கடியா லோகர்கள், ரைகர்கள் மற்றும் கடாரியாக்கள் ஆகியோருக்கு 5 சதவிகித இடஒதுக்கீட்டுடன் சேர்த்து மொத்த அளவை 26 சதவிகிதமாக உயர்த்தக் கோருகின்றது.
- இம்மசோதாவின் நோக்கங்கள் மற்றும் காரணங்கள் மேலே கூறிய ஐந்து சாதியினரும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும் 5 சதவிகித தனிப்பட்ட இடஒதுக்கீடு அவர்களுக்குத் தேவை என்றும் கூறுகின்றது.
- இந்த இட ஒதுக்கீட்டுடன் சேர்த்து ராஜஸ்தானின் ஒட்டுமொத்த இட ஒதுக்கீட்டு சதவிகிதம் உச்சநீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட 50 சதவிகித வரம்பை மீறுகின்றது.
- மேலும் சட்டப்பூர்வமாக நிகழக்கூடிய ஒரு தடையைத் தவிர்த்திடும் வகையில் ராஜஸ்தான் மாநில சட்டப்பேரவை அச்சமூகத்தினருக்கான இடஒதுக்கீட்டை உறுதி செய்திட அம்மசோதாவை 9வது பட்டியலில் இணைத்துக் கொள்ள மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதற்கான ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியிருக்கின்றது.

### *50 சதவிகிதத்திற்கும் அதிகமாக*

- ஏற்கெனவே தமிழ்நாடு 69 சதவிகித இடஒதுக்கீட்டை அளித்துக் கொண்டிருக்கின்றது.
- மகாராஷ்டிரா மாநில அரசு ஏற்கனவே உள்ள 52 சதவிகித இடஒதுக்கீட்டுடன் கூடுதலாக 10 சதவிகிதத்தை மராத்தா சமூகத்தினருக்கு அளிக்கும் வகையில் நவம்பர் 2018 சமயத்தில் ஒரு சட்டம் இயற்றியது. இதன் மூலம் இரண்டாவது மிக அதிகமான அளவாக 68 சதவிகிதத்திற்கு இடஒதுக்கீடு அளிக்கும் மாநிலமாக அது உருவெடுத்தது.
- மேலும் அரியானா, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களும் முறையே 67, 62, 55 சதவிகிதம் என்ற அளவில் இடஒதுக்கீடு வழங்க சட்டங்கள் இயற்றியிருக்கின்றன.

# இதரச் செய்திகள்

## 30 வயதிற்கு கீழ் உள்ள 30 – போர்ப்ஸின் ஐரோப்பியப் பட்டியல்

- போர்ப்ஸ் தனது 30 வயதிற்கு கீழ் உள்ள 30 ஐரோப்பியர் பட்டியல் என்ற தனது நான்காவது வருடாந்திரப் பதிப்பை வெளியிட்டது.
- ஐரோப்பியப் பகுதியில் தொழில்துறையை சீரமைத்து ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தும் 300 இளைய எழுச்சியாளர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் வளரும் நட்சத்திரங்களை இப்பட்டியல் உள்ளடக்கியது.
- இப்பட்டியல் 10 பிரிவுகளிலிருந்து அனைவரும் 30 வயதிற்கு கீழ் அமைந்த வகையில் உள்ள 30 மேதைகளைக் கொண்டிருக்கும்.
- 2019 ஆம் ஆண்டுப் பட்டியல் 56 நாடுகளைச் சார்ந்தவர்களை உள்ளடக்கியிருக்கின்றது. அதில் 36 சதவிகிதம் பெண்களாக உள்ள வகையில் ஒரு பரந்த 30 மேதைகளின் பட்டியலைக் கொண்டிருக்கின்றது.
- அதில் குறிப்பிடும்படியான முக்கிய நபர்களில் ஒருவர் பிரான்சின் தேசிய கால்பந்து வீரரான அன்டோய்னி கிரீஸ்மேன் ஆவார்.

- - - - - - - - - - - - - - - -